முக்கிய வார்த்தைகள்:
அறிவுத்திறன்
மனம்
சிந்தனை செய் / காரணம்
செயற்கை நுண்ணறிவு [AI]

இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
06 நவம்பர் 2026 / 26 ஜமாதில் அவ்வல் ஹிஜிரி 1448

இஸ்லாமும், அறிவுத்திறன் மற்றும் செயற்கை நுண்ணறிவும்

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيلِ: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.

ஜும்ரதல் மு:மினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]
அல்லாஹ்வின் கட்டளைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ்வினால் விலக்கப்பட்டவைகளிலிருந்து விலகி இருப்பதன் மூலமாகவும், அல்லாஹ்வின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! நமது தக்வா, இவ்வுலகிலும் மறுமையிலும் நமது மகிழ்ச்சியின் ஊற்றாக அமையட்டுமாக!. ஆமீன், யா ரப்பல் ஆலமீன்.

அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!
திருக்குர்ஆன், மனிதகுலத்தைப் **பகுத்தறிவைப்** பயன்படுத்தி, **சிந்தனை** செய்வதன் பால் மீண்டும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றது. திருக்குர்ஆனின் பல வசனங்களிலும், பெரும்பாலான வசனங்களின் இறுதியிலும் "அ:பலா ய:கிலூன்" [அவர்கள் **பகுத்தறிவைப்** பயன்படுத்துவது அவசியமல்லவா?]

அஃபலா யததப்பரூனல் குர்ஆன்: [அவர்கள் இந்தக் குர்ஆனை **ஆராய்ந்து** பார்க்க வேண்டாமா?], அஃபலா ததஃபக்கரூன் [நீங்கள் **சிந்திக்க** வேண்டாமா?] என்று அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கேட்கின்றான்.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது **அறிவுத்திறனிலும் பகுத்தறியும் ஆற்றலிலும்** கவனம் செலுத்துமாறு நமக்கு அழைப்பு விடுகின்றான். ஏனெனில், அவ்வாறு செய்வது உண்மையைப் பொய்யிலிருந்தும், சரியைத் தவறிலிருந்தும் பிரித்தறிய நமக்கு உதவுகிறது. நமது **அறிவுத்திறன்**, நாம் அன்றாடம் எடுக்கும் முடிவுகளில் ஆதிக்கம் செலுத்துகிறது, அது நமது குணநலன், நடத்தை மற்றும் மார்க்க வாழ்க்கையை வடிவமைக்கின்றது.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-அன்ஃபால்" எனும் அத்தியாயத்தின் 22 -வது வசனத்தில் கூறுகின்றான்:

إِنَّ شَرَّ ٱلدَّوَآبِّ عِندَ ٱللَّهِ ٱلصُّمُّ ٱلۡبُكۡمُ ٱلَّذِينَ لَا يَعۡقِلُونَ ٢٢

பொருள்: *நிச்சயமாக, அல்லாஹ்விடத்தில், உயிர்ப் பிராணிகளிலேயே மிகவும் கேவலமானவர்கள் [உண்மையை] அறிந்து கொள்வதற்கு அறிவைப் பயன்படுத்தாத செவிடர்களும் ஊமைகளும் ஆவர்.*

திருக்குர்ஆனில் காணப்படும், **அறிவின்** முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கும் வலிமையான வசனங்களில் இதுவும் ஒன்றாகும். உண்மையை அறிந்துகொள்வதற்காகத் தங்கள் **அறிவைப்** பயன்படுத்துவதற்கு, வேண்டுமென்றே மறுப்பவர்களுக்கு கடுமையானக் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது. அல்லாஹ், தங்களுக்கு வழங்கிய **மனதை**, அறிவுத்திறனை பயன்படுத்த மறுப்பவர்களுக்கு கடுமையாக எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!
உண்மையிலேயே, சற்றுமுன் ஓதப்பட்ட வசனம், இன்றைய காலகட்டத்தில் மிகவும் பொருத்தமானதாக இருக்கின்றது. **செயற்கை நுண்ணறிவின்** (AI) விரைவான வளர்ச்சியால், ஒரு காலத்தில் நமது **சொந்த சிந்தனை** தேவைப்பட்ட பல பணிகள், இப்போது ஏறக்குறைய உடனடியாகவே முடிந்து விடுகின்றன, மேலும் **செயற்கை நுண்ணறிவு** [AI] நமது அன்றாட வழக்கங்களின் ஒரு பெரும் பகுதியாகி விட்டது.

பயனுள்ள தொழில்நுட்பத்தை இஸ்லாம் தடை செய்யவில்லை என்பது உண்மைதான். இருப்பினும், **செயற்கை நுண்ணறிவை** (AI) அளவுக்கு அதிகமாகச் சார்ந்திருப்பது கவலைக்குரிய விஷயமாகும், ஏனெனில், அதனால் நமது மனமும் சிந்திக்கும் ஆற்றலும் படிப்படியாகப் பாதிக்கப்படலாம். எளிய பணிகளை நாமே முயற்சி செய்யாமல், தொடர்ந்து **செயற்கை நுண்ணறிவிடம்** ஒப்படைக்கும்போது, நமது **சிந்திக்கும்** திறனுக்குப் பயிற்றுவிப்பதில் நாம் தோல்வியடைகிறோம்.

எனவே, **செயற்கை நுண்ணறிவு,** மனித **அறிவை** மாற்றுவதாகவோ அதனை சோம்பேறியாக ஆக்குவதாகவோ அமையக் கூடாது, மாறாக மனித அறிவுக்குத் துணைபுரியும் ஒரு கருவியாகவே அது நீடிக்க வேண்டும். இது சம்பந்தமாக, இன்றைய "குத்பா" பிரசங்கம் பின்வரும் மூன்று அணுகுமுறைகளை உங்களுக்குப் பரிந்துரை செய்கிறது:

முதலாவதாக: செயற்கை நுண்ணறிவை நாடும் முன், நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.
முதலில், நமது சொந்த யோசனைகளை உருவாக்கி, பிரச்சனைகளை நாமே தீர்க்க முயற்சிக்க வேண்டும். அதன் பிறகு, நமது பணிகளைச் செம்மைப்படுத்தவும், மேம்படுத்தவும் **செயற்கை நுண்ணறிவைப்** பயன்படுத்தலாம்.

இரண்டாவதாக: நமது தீர்ப்பை முழுவதுமாக செயற்கை நுண்ணறிவிடம் ஒப்படைக்காமல், அதன் துல்லியமான விளக்கத்தைச் சரிபார்க்க வேண்டும்.

செயற்கை நுண்ணறிவானது, உண்மையெனத் தோன்றும் பல தவறான தகவல்களை நமக்கு வழங்கக்கூடும். *ஒருவர் பெறும் அனைத்தையும் சரிபார்க்காமல் பிறரிடம் கூறுவது, பொய்க்கு வழிவகுக்கும்* என்று ரசூலுல்லாஹி [ஸல்] அவர்கள் எச்சரித்துள்ளார்கள். நமது முடிவுகளுக்கு நாமே பொறுப்பாவோம். குறிப்பாக, ஒழுக்கம் சம்பந்தமான மற்றும் மதரீதியான தீர்ப்புகளை **செயற்கை நுண்ணறிவிடம்** ஒப்படைக்கக் கூடாது. மத விஷயங்களில், நாம் **செயற்கை நுண்ணறிவை** மட்டும் நம்பாமல், தகுதி வாய்ந்த அசாதிதாக்களையே (ஆசிரியர்களையே) நாட வேண்டும்.

மூன்றாவதாக: மரபு சார்ந்த, வழக்கமான வழிகளில் அறிவைக் கூர்மையாக்க வேண்டும்.

சகோதரர்களே! வாசித்தல், அறிவுக் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல், நேரில் கலந்துரையாடுதல் போன்ற பழக்கவழக்கங்கள் மற்றும் வழமையானச் செயல்கள் மூலம் நமது இயல்பான **அறிவை** நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். **செயற்கை நுண்ணறிவைப்** பயன்படுத்துவதற்கு முன்பு, இது ஒரு பொருத்தமான அல்லது அவசியமான பயன்பாடா? அல்லது இது நம்மைச் **சிந்திக்க** விடாமல் தடுக்கிறதா? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். நமது நேரம், அறிவாற்றல் மற்றும் **மனம்** ஆகியவை அல்லாஹ்விடமிருந்து கிடைத்துள்ள ஒரு அமானத் [அமானிதம்] என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அன்பான சகோதரர்களே!

இந்த விழிப்புணர்வுடன், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருப்தியடையும் வகையில், **செயற்கை நுண்ணறிவைப்** பொறுப்புடனும் மிதமாகவும் பயன்படுத்தி, நமது **அறிவின்** வலிமையைப் பாதுகாப்போமாக! ஒவ்வொரு அருளும் முன்னேற்றமும் ஒரு அமானத் (அமானிதம்) என்பதை நினைவில் கொள்ளுங்கள்; நமக்கு வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு அமானிதத்தைப் பற்றியும் மறுமையில் நாம் கேள்வி கேட்கப்படுவோம்.

எனவே, நம்பிக்கையுடனும் ஞானத்துடனும் வாழ்க்கைப் பயணத்தை வழிநடத்த அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு வழிகாட்டுவானாக. ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.